


பயிற்சிக்காக ஆப்கனிஸ்தானுக்கு வந்த அந்த நான்கு ஜெர்மன் இளைஞர்களுக்கும், இரண்டாயிரமாவது ஆண்டுத் தொடக்கத்தில் எல்லா பயிற்சிகளும் முடிந்து, பச்சைக்கொடி காட்டிவிட்டார்கள். நாலு பேரில் ஒருவனான மார்வான் அல் ஷெஹியை அங்கிருந்து அப்படியே ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குப் போய், அங்கே விமானம் பிடித்து அமெரிக்கா போய்ச் சேரச் சொல்லி உத்தரவிட்டார்கள். ஜனவரி 31-ம் தேதி ஜரா ஆப்கனிஸ்தானிலிருந்தே நேராக ஜெர்மனிக்குப் போய்விட்டான். பினல்ஷிப்பையும் முஹம்மது அட்டாவையும் மட்டும் கராச்சிக்குப் போய் காலித் ஷேக் முஹம்மதுவைச் சந்தித்துவிட்டு, அங்கிருந்து ஜெர்மனிக்குப் போகச் சொல்லியிருந்தார்கள்.

இதில் ஒரு காமெடி என்னவென்றால், இந்த ஜெர்மன் கோஷ்டிதான் விமானங்களை ஓட்டப்போகிறார்கள் என்பதோ, அட்டாவைத்தான் பின்லேடன் கமாண்டராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்கிற விவரமோ, அந்தக் கணம் வரை காலித் ஷேக்குக்குத் தெரியாது. ஆப்கனிலிருந்து அனுப்பப்படுபவர்களுக்கு இன்னின்ன பயிற்சிகள் தரவேண்டும் என்பது மட்டும்தான் அவருக்கு அளிக்கப்பட்ட உத்தரவு. திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்!

"நமது செயல்பாடுகளை விட, செய்பவர்களைவிட, நமது செயல்களின் விளைவுகள் மட்டுமே முக்கியம்" என்பதுதான் அல் காயிதாவின் தாரக மந்திரம்.

ஆச்சா? அட்டாவும் பினல்ஷிப்பும் கராச்சிக்குப் போய் அந்தப் பிரசித்தி பெற்ற டெலிபோன் டைரக்டரி பாடங்களையும் விமான சிமுலேட்டர் பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டு, அங்கிருந்து நேரே ஹாம்பர்க் போய்ச் சேர்ந்தார்கள்.

ஊர்ப் போய்ச் சேர்ந்த வினாடியிலிருந்து, நான்கு பேரின் நடவடிக்கையும் முற்றிலுமாக மாறிவிட்டது. முன்பெல்லாம் அழுக்கு அங்கி உடுத்திக்கொண்டு, பங்கரையாக தாடி வளர்த்துக்கொண்டு வலம் வந்துகொண்டிருந்தவர்கள், தினசரி நீட்டாக ஷேவ் பண்ணிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அமெரிக்கர்களே பார்த்து வியக்கும்படி படு ஸ்மார்ட்டாக டிரெஸ் பண்ணிக்கொண்டு, பார்ட்டிகளுக்கும் பொது இடங்களுக்கும் போக ஆரம்பித்தார்கள். முன்னைப்போல் எப்போதும் உர்ரென்று முகத்தை வைத்துக்கொண்டு மசூதியே கதி என்று கிடக்கவில்லை. ஜரா ஒரு படி மேலே போய், தன்னுடைய ஜெர்மன் காதலியுடன் உல்லாசப் பயணமெல்லாம் போய் வந்திருக்கிறான் என்கிற தகவல், பின்னால் விசாரணையின்போது தெரியவந்தது.

மேட்டருக்குத் தொடர்பில்லாவிட்டாலும் அந்தக் காதலி குறித்து சில வரிகள் இங்கே சொல்லிவிடலாம். வெறும் தாடிவாலாக்களாக வலம் வரும் பிராந்தியத்தில், தப்பித்தவறி வந்து சேர்ந்துவிட்ட ஒரே அழகான இளம் பெண் அல்லவா!

ஜராவின் காதலியின் பெயர் செங்குவென். 1996-ல், தன்னுடைய 21-வது வயதில் ஜராவை இவள் காதலிக்க ஆரம்பித்தாள். 1999-ம் ஆண்டு தங்களுக்குள் அஃபிஷியலாகத் திருமணம் என்று ஒன்று ஆகாவிட்டாலும், சேர்ந்து வாழ்வதாகப் பகிரங்கமாக அறிவித்தார்கள். ஜரா அமெரிக்கா போனபிறகு, 2001 ஜனவரியில், இவள் அவனைப் பார்ப்பதற்காகவே அமெரிக்காவுக்கு ஒருமுறை பறந்துபோயிருக்கிறாள். அப்போது அங்கே ஜரா விமான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தான். பயிற்சியின்போது, செங்குவெனும் ஒருமுறை அவனுடன் பறந்திருக்கிறாள்.

சம்பவத்துக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, "அன்றைக்கு (செப்-11) காலை மூன்றுமுறை ஜரா எனக்குத் திரும்பத் திரும்ப போன் செய்து, 'ஐ லவ் யூ, ஐ லவ் யூ' என்று சொன்னான். ஏனென்று அப்போது எனக்குப் புரியவில்லை. அவன் இப்படிப்பட்ட ஆள் என்று என்னால் நினைத்துப் பார்க்கக் கூட

முடியவில்லை" என்று கதறியிருக்கிறாள்!

செங்குவென்னை இங்கே திருப்பி அனுப்பிவிட்டு, மீண்டும் விஷயத்துக்கு வரலாம்.

ஆப்கனிஸ்தானிலிருந்து கிளம்பி ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தார்களா? வந்தவுடனேயே எது நல்ல விமானப் பயிற்சிப் பள்ளி என்று தேட ஆரம்பித்தார்கள். ஜெர்மனி முழுக்க எங்கெல்லாம் அத்தகைய பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்று தேடி, நடையாய் நடந்தும் நயா பைசா பிரயோஜனமில்லை.

சரி, வேறு எங்காவது எதாவது இருக்கிறதா பார்க்கலாம் என்று நெதர்லாண்டிலும் இத்தாலியிலும் பிரான்சிலும் முயற்சி செய்து பார்த்தார்கள். ஒன்றும் சரிப்படவில்லை. அமெரிக்காதான் அதற்கும் சரி என்று தோன்றியது. ஒரு ஜெர்மன் பைலட்டிடம் இதுகுறித்துப் பேசிய பினல்ஷிப்பிடம் அவர், 'குறைந்த செலவில், குறுகிய காலத்தில் விமானம் ஓட்டக் கற்றுக்கொள்வதென்றால், நீங்கள் அமெரிக்காதான் போயாகவேண்டும்' என்று சொல்லவே, சரி, வேறு வழியில்லை; படித்த இடத்தில்தான் பட்டையைக் கிளப்பவேண்டும் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

மார்ச் 2000-ல் முஹம்மது அட்டா, அமெரிக்காவிலுள்ள 31 விமானப் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஒரே மின்னஞ்சலை அனுப்பினான். அதில், 'ஜெர்மனியில் வசிக்கும் சில அரபு இளைஞர்கள், அமெரிக்கா வந்து விமானப்பயிற்சி மேற்கொள்ள விரும்புகிறோம். ஃபீஸ் எத்தனை, அங்கேயே சாப்பிட்டுத் தூங்க இட வசதி கிடைக்குமா?' என்று கேட்டு எழுதியிருந்தான்.

அமெரிக்க விசா பெற மனு செய்வதற்கு முன்னர் அட்டா, ஜரா, ஷெஹி ஆகியோர் புதிதாக பாஸ்போர்ட்டுக்கும் அப்ளை பண்ணியிருந்தார்கள். பழைய பாஸ்போர்ட் தொலைஞ்சு போச்சு என்று மூன்று பேரும் ஒரே பாட்டை வேறு வேறு ராகத்தில் பாடியிருந்தார்கள். பழைய பாஸ்போர்ட்டில் பாகிஸ்தான் விசா பெற்றதற்கான ஆதாரங்கள் இருந்ததால், அதனால் எதாவது வம்பு வழக்கு வரப்போகிறதோ என்கிற முன் ஜாக்கிரதைதான் இதற்குக் காரணம்.

என்னடா இது, முந்தைய பேரா வரைக்கும் பினல்ஷிப் என்றொரு பிரகஸ்பதி வந்துகொண்டிருந்தானே, திடீரென்று இங்கே அவனைக் காணோமே என்று தோன்றுகிறதா?

என்ன செய்வது? அதற்குமுன் அவன் எந்தத் தப்பு தண்டாவும் செய்ததில்லைதான். போலீஸ் கான்ஸ்டபிள்கள் யாரும் அவனிடம் பீடிக்கு நெருப்புக் கேட்கக் கூட நெருங்கியதில்லைதான். எல்லா மாணவர்களையும் போலத்தான் அவனும் இருந்தான். ஆனாலும் அவனுக்கு அமெரிக்க விசா மறுக்கப்பட்டுவிட்டது. காரணம், அவன் ஏமன் குடிமகன்!

பினல்ஷிப்புக்கு ரொம்ப வருத்தமாகி, துக்கம் பீறிட்டுவிட்டது. தன்னால் அந்தக் காரியத்தில் பங்குபெற முடியவில்லையே என்கிற ஏக்கத்தில், ஒருவாரம் சாப்பிடாமலேயே இருந்திருக்கிறான். அப்புறம் அல் காயிதா மேலிடம் அவனைச் சமாதானப்படுத்தி, மற்றவர்களுக்கு உதவி செய்யும்படி சொல்லி ஒருவாறாகச் சமாளித்தது.

பினல்ஷிப் மாதிரி தாங்கள் எந்தச் சிக்கலிலும் மாட்டிக்கொண்டுவிடக் கூடாதே என்கிற முன் யோசனையால்தான், மற்ற மூவரும் பாஸ்போர்ட் தகிடுதத்தம் செய்தார்கள். அதன்படி, ஷெஹிக்கு ஜனவரி - 18,2000 அன்றும்; ஜராவுக்கு மே 25-ம் தேதியும்; அட்டாவுக்கு மே 18-ம் தேதியும் அமெரிக்க விசா கிடைத்துவிட்டது.

அப்புறம் என்ன? கிளம்பவேண்டியதுதானே? பினல்ஷிப் மட்டும் ஜெர்மனியிலேயே தங்கி, நண்பர்களுக்கும் மற்ற முகம் தெரியாத நண்பர்களுக்கும் கடைசிவரை தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்துவந்தான். சம்பவத்துக்குப் பிறகு, மாட்டிக்கொண்ட முக்கியஸ்தர்களுள் ஒருவனாகவும் ஆகிப்போனான். (9/11 சம்பவம் தொடர்பாக நமக்குக் கிடைக்கும் விவரங்களில் பெரும்பாலானவை காலித் ஷேக் முஹம்மதுவும் பினல்ஷிப்பும் விசாரணையில் திருவாய் மலர்ந்து அருளியவற்றிலிருந்து பெறப்படுபவையே!)

ஆக, ஆட்கள் ரெடி. அவர்கள் அமெரிக்கா புறப்பட்டுப் போயாகிவிட்டது. அடுத்தபடியாகப் பணம்.

இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் நாலு முதல் ஐந்து லட்சம் அமெரிக்க டாலர்கள் என்று 9/11 விசாரணை கமிஷன் மதிப்பிடுகிறது. 2000-ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து 2001 செப்டெம்பர் 11 காலை வரை செலவான தொகை இது. திட்டத்தின் பிரமாண்டத்தோடு ஒப்பிட்டால், இது ஒரு பெரிய செலவே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அமெரிக்காவில் பயணம் செய்ய, அமெரிக்காவுக்குப் பயணம் செய்ய, தங்குவதற்கு, சாப்பிடுவதற்கு,

உபகரணங்களை வாங்குவதற்கு எனப் பார்த்துப் பார்த்துத் தீவிரவாதிகளின் செலவுகளைக் கவனித்துக்கொண்டவர் காலித் ஷேக் முகம்மது. கடத்தல் திட்டத்தில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளும், தங்களை யாரும் சந்தேகப்பட முடியாதபடியே பண விஷயத்தில் மிகவும் கவனமாக நடந்துகொண்டார்கள். ஒவ்வொருவரும் தம் சொந்தப் பெயரிலேயே வங்கிகளில் கணக்குத் தொடங்கி, பணத்தைப் போட்டுவைத்தார்கள்.

இந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்கிற விவரம் மட்டும், அத்தனை துல்லியமாகத் தெரியவில்லை. ஆனால், அல் காயிதாவுக்கு எந்தெந்த வழிகளில் பணம் வந்திருக்கக்கூடும், எந்தெந்த வழிகளில் வந்திருக்க முடியாது என்பது பற்றிய சில விவரங்களை விசாரணை கமிஷன் அறிக்கை வெளியிடுகிறது:

9/11 சம்பவத்துக்கு முன்னதாக, அல் காயிதாவின் ஆண்டு பட்ஜெட் முப்பது மில்லியன் டாலர் என்பதாக சி.ஐ.ஏ. மதிப்பிட்டிருக்கிறது. இத்தொகை முழுவதுமே வசூல் மூலம்தான் திரட்டப்படுகிறது. பின்லேடனின் சொந்தப்பணம் அல்ல.

1991-96 காலகட்டத்தில் ஒசாமா பின்லேடன், சூடானில் இருந்த காலத்தில் ஏராளமான சிறு வியாபாரங்களை நடத்திவந்தது உண்மையே. ஆனால், அவர் சூடானை விட்டுப் புறப்பட்டதும் பின்லேடனின் நிறுவனங்கள் அனைத்தையும் சூடான் அரசு எடுத்துக்கொண்டுவிட்டது. உண்மையில் அவர் சூடானை விட்டுப் போகும்போது, குறிப்பிடும்படியான பணபலம் ஏதும் இல்லாதவராகத்தான் ஆப்கனுக்குச் சென்றார்.

அல் காயிதாவுக்குத் தனியாக நிதி திரட்டும் குழுக்கள் உண்டு. இக்குழுக்கள் வளைகுடா நாடுகளெங்கும் - குறிப்பாக சவூதி அரேபியாவில் மிகத் திறமையாகச் செயல்பட்டு, பெரிய வர்த்தக நிறுவனங்களிடமும் பெரும் பணக்காரர்களிடமும் அல்காயிதாவுக்கான நிதியைக் கோரிப் பெறுகின்றன.

அல்காயிதா நிதி சேகரிப்போர், பல நாடுகளில் உள்ள மசூதிகளின் இமாம்களுடன் நட்பு கொண்டு, மசூதிகளுக்கு மக்களால் அளிக்கப்படும் நிதியை அல்காயிதாவுக்குத் திருப்பிவிடுகிறார்கள்.

ஒசாமா பின்லேடனின் இயக்கத்துக்கு சவூதி அரேபிய அரசு நீண்ட நெடுநாட்களாக மறைமுகமாக நிதியுதவி செய்து வருவதாக ஒரு வதந்தி உண்டு. ஆனால், சவூதி அரசோ, அதன் உயர் அதிகாரிகளோ, பெரிய அரசுத்துறை நிறுவனங்களோ அல் காயிதாவுக்கு நிதியுதவி செய்வதற்கான ஆதாரங்கள் ஏதும் அமெரிக்காவிடம் இல்லை.

ஒசாமா பின்லேடன், பாகிஸ்தான், துபாய், பல்வேறு மத்திய கிழக்கு நாடுகளில் ஹவாலா முறைப்படி சுலபமாகப் பணத்தைப் பரிமாற ஏற்பாடுகள் செய்திருக்கிறார். ஆனால், ஆப்கனிஸ்தானில் இல்லை. ஏனெனில், ஆப்கனிஸ்தானின் வங்கி நடவடிக்கைகள் அத்தனை உத்தமமானதில்லை.

இதெல்லாமே ஓரளவு நம்பக்கூடிய விஷயங்கள்தாம். ஏனெனில், அல் காயிதாவின் பணப்பாதை என்பது, சுலபத்தில் யூகிக்கவே முடியாத விஷயம் என்று, அந்த இயக்கத்தைக் குறித்து ஆய்வு செய்திருக்கும் அத்தனை பேருமே சூடம் அணைத்துச் சத்தியம் செய்கிறார்கள். அமெரிக்காவிலேயே வருஷத்துக்கு ஒரு லட்சம் டாலர் வரைக்கும் வசூல் செய்யக்கூடிய இயக்கம் என்றுகூட எழுதுகிறார்கள். அல் காயிதா என்று சொல்லிக்கொண்டா அமெரிக்காவில் வசூல் செய்ய முடியும்? ஆகவே, இந்த யூகங்களைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு, சம்பவத்தை நோக்கிக் கொஞ்சம் வேகமாகப் போகலாமா?

வர்த்தக மையத் தாக்குதல் சம்பவத்தில், நேரடியாக ஈடுபட்ட அல் காயிதா உறுப்பினர்கள் மொத்தம் 19 பேர். இதில் ஆறு பேரைப் பார்த்துவிட்டோம். மிச்சம் பதின்மூன்று பேர்?

அவர்களுள் பன்னிரண்டு பேர் சவூதி அரேபியர்கள். 1. சதாம் அல் சுகாமி 2. வெய்ல் அல் ஷெஹ்ரி 3. வாலீத் அல் ஷெஹ்ரி 4. அப்துல் அஜிஸ் அல் ஓமாரி 5. அஹமது அல் காம்தி 6. ஹம்சா அல் காம்தி 7. மொஹந்த் அல் ஷெஹ்ரி 8. மஜீத் மொகத் 9. சலீம் அல் ஹஜ்மி 10. சயீது அல் காம்தி 11. அகமது அல் ஹஸ்னவி 12. அகமது அல் நாமி.

பெயர்களை ஊன்றி கவனிக்காமல் கண் வேகமாக ஓடியிருக்கும்; பாதகமில்லை. அத்தனை பேருமே 28 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். பரம ஏழைகளும் கூட. அதிக படிப்பெல்லாம் கிடையாது. ஆனால் அல் காயிதா விசுவாசிகள். போதாது? செத்துப்போகத் தயார் என்று சொல்லிவிட்டு, அமெரிக்கா போய்ச் சேர்ந்த அப்பாவிப் படுபாவிகள்.

அந்தப் பதின்மூன்றாவது நபரின் பெயர் ஃபயாஸ் பானிஹமாத். இவன் ஐக்கிய அரபு எமிரேட்ஸைச் சேர்ந்தவன்.

சம்பவம் நடந்தபிறகு, சவூதியில் இவர்களைப் பற்றியெல்லாம் விசாரித்தபோது, அதிகாரிகளுக்கு ரொம்பவே ஆச்சரியமாகப் போயிருக்கிறது. மேற்படி பதின்மூன்று பேரின் குடும்பத்தினரும் அல் காயிதா என்றால் கருப்பா, சிவப்பா என்று கேட்டார்களாம். தங்கள் மகன்கள் அப்படியொரு இயக்கத்தில் இருப்பதே யாருக்கும் தெரியவில்லை!